OIC

FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319424

1. District : Coimbatore PS: Vigilance and Anticorruption Year: 2026 FIR No.: 06/2026/OC/CB Date: 05.06.2026
   மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள 1600

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 Sections பிரிவுகள்: 7(a), 12 r/w 7(a) and 8
   (ii) Act சட்டம்: as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: —
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 04.06.2026 Date to : -
   குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
   Time Period : Time from : 1530 Time to : 2200
   நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
   (b) Information Received at PS. Date : 05.06.2026 Time : 1530
   காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) Volume - I Time : 05/6/2026 1530
   பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : written
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: about 10km, North east
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : — (b) Address : office of Gandhipuram Sub Registrar
   முறைக் காவல் எண் முகவரி Saravanampatty, Coimbatore District
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : T. Sangeetha (b) Father's/ Husband's Name V. Sakthivel
   குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : 28/2026 (d) Nationality : Indian (e) Passport No. : —
   நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : Place of Issue : —
   வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : Dy. Collector/Tahsildar (g) Address : office of District Collector Coimbatore
   தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1) G. Selvakumar, Assistant S/o Gandhipuram S.R.O, Coimbatore
   2) M. Sibin S/o moni, 73 P. K. R. G. Nagar, Ganapathy, Coimbatore
   3) G. Rajagopal S/o Ramasamy, 22 Pillaiyar Koil St, Gopichettipalayam, Erode Dt
   4) A. Chandra Sekar S/o Arumachalam, 4/3 Aliyur street, Vedapatty, Coimbatore Dt
   5) A. Arunkumar S/o Arjunan, Gangavalli, Virudhunagar Dt

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   — No delay —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

Submitted

Separate sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... D. Shanty Rank ..... Inspector of Police ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..... V2 PC, Commercial on point of jurisdiction

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

5/6/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

G. Arumugam
Inspector of police
Vigilance & Anti Corruption

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

05/06/2026 at 1700 h.

Name: பெயர் .....
Rank: நிலை ..... No. எண்.....

பணிந்து சமர்பிக்கப்படுகிறது:

In continuation of FIR (C 8319424) in Coimbatore V&AC Cr.No.06/2026/AC/CB u/s 7(a), 12 r/w 7(a), 8 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018.

இன்று 05.06.2026 ஆம் தேதி 15.30 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் G.ஆறுமுகம் ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திருமதி.T.சங்கீதா, துணை ஆய்வுகுழு அலுவலர் / வட்டாட்சியர், மாவட்ட ஆய்வுகுழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கோயம்புத்தூர். என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமாக புகாரின் விவரம் பின்வருமாறு: அனுப்புனர், திருமதி.T.சங்கீதா, துணை ஆய்வுகுழு அலுவலர் / வட்டாட்சியர், மாவட்ட ஆய்வுகுழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கோயம்புத்தூர். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கோவை. ந.க.எண்.97/2026/ஐ1, நாள்: 05.06.2026, அய்யா, பொருள்: திடீர் ஆய்வு – கோயம்புத்தூர் மாவட்டம் – கோவை காந்திபுரம் சார்பதிவாளர் அலுவலகம் – திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது – மேல் நடவடிக்கைக்காக புகார் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் அளித்தல் – சம்மந்தமாக. கோவை காந்திபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரம் பதிவு செய்வதற்கும், வில்லங்க சான்று பெறுவதற்கும், அடமான பத்திரம் பதிவு செய்வதற்கும் வருகை தரும் பொது மக்களிடமிருந்தும், பத்திர எழுத்தர்கள் / பத்திர தயார் செய்பவர்களிடமிருந்தும், நேரடியாகவும், மறைமுகமாகவும், திரு.சிபின் என்பவர் மூலம் கையூட்டு பணம் பெற்று வருவதாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் பேரில் கோவை துணை ஆய்வுகுழு அலுவலர் / வட்டாட்சியர் ஆகிய நானும் கோவை ஊழல் தடுப்பு மற்றம் கண்காணிப்புப் பிரிவு ஆய்வாளர் திரு.G.ஆறுமுகம் மற்றும் காவல் குழுவினருடன் இணைந்து ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து 04.06.2026 ஆம் தேதி மதியம் 14.30 மணிக்கு புறப்பட்டு சென்று கோவை காந்திபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் திடீர் கூட்டு ஆய்வு மாலை 15.30 மணி முதல் இரவு 22.00 மணி வரை மேற்கொள்ளப்பட்டது. அந்த திடீர் ஆய்வின் போது கண்டுபிடிக்கப்பட்ட விவரங்கள் பின்வருமாறு. காந்திபுரம் சார்பதிவாளர் அலுவலகமானது கோவை சரவணம்பட்டியில் காளப்பட்டி – விளாங்குறிச்சி ரோட்டில் தெற்குபுறமாக உள்ள குமரன் நகர் செல்லும் கிளை ரோட்டில் கிழக்கு பார்த்த நுழைவாயிலுடன் அமைந்துள்ளது. இவ்வலுவலகம் அரசுக்கு சொந்தமான கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இந்த கட்டிடத்தின் கிழக்கு பார்த்த வாயிலுக்குள் நுழைந்ததும் வராண்டா ஒன்று பொது மக்கள் அமருவதற்காக இருக்கைகளுடன் உள்ளது. வராண்டாவை ஒட்டி கண்ணாடி கதவுகள் போடப்பட்டுள்ள

வடக்கு பார்த்தவாறு உள்ள வாயிலினுள் நுழைந்ததும் ஒரு பெரிய ஹால் உள்ளது. அந்த ஹாலின் கிழக்கு பார்த்தவாறு சார்பதிவாளரின் இருக்கை இருந்தது. அதில் அமர்ந்திருந்த திரு.G.செல்வக்குமார் என்பவரிடம் துணை ஆய்வுக்குழு அலுவலர் / வட்டாட்சியர் ஆகிய நானும், கோவை ஊ.த.க.பிரிவு காவல் ஆய்வாளர் திரு.G.ஆறுமுகம் மற்றும் குழுவினர்களை அவரிடம் அறிமுகம் செய்து கொண்டு திடீர் தணிக்கைக்கு வந்த விபரத்தை கூறியும் எங்களிடம் பணமோ பொருளோ இல்லை என்பதை உறுதி செய்து கொண்டோம். பின்னர் திரு.G.செல்வக்குமார் அவர்களை விசாரிக்க அவர் அந்த அலுவலகத்தின் உதவியாளர் என்றும் அவர் 06.12.2023 ம் தேதி முதல் பணிபுரிந்து வருவதாகவும், இந்த சார்பதிவாளர் அலுவலகமானது மாவட்ட பதிவாளர் நிலையில் உள்ளது என்றும், இதற்கு முன் காந்திபுரம் சார்பதிவாளராக திரு.பீட்டர் மைக்கல் அவர்கள் கடந்த அக்டோபர் மாதம் 2023 ஆம் ஆண்டு முதல் பணிபுரிந்து வந்ததாகவும், நேற்று 03.06.2026 ஆம் தேதி சார்பதிவாளர் பொள்ளாச்சி, கோவை (தெற்கு) சார்பதிவாளர் அலுவலகத்திற்கு பணிமாறுதலில் சென்றதால், அவர் அன்று (04.06.2026) முதல் சார்பதிவாளராக (பொறுப்பு) பார்த்து வருவதாக கூறினார். திரு.G.செல்வக்குமார் அமர்திருந்த இருக்கை, மேஜை மற்றும் கோப்புகளை சோதனை செய்யப்பட்டது. சோதனை செய்ததில் எவ்வித பணமும் கைப்பற்றப்படவில்லை. மேலும் அவரிடம் வேறு பணம் ஏதேனும் உள்ளதா என்று விசாரிக்க அவரிடமிருந்த பணம் ரூ.100/- எடுத்து ஆஜர் செய்தார். அதனை பற்றி கேட்க அந்த தொகையானது, இன்று அலுவலகம் வரும் போது ரூ.300/- எடுத்து வந்ததாகவும், அதனை அலுவலக பணக்கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்ததாகவும், அதில் செலவு போக மீதி பணம் ரூ.100/- எனவும், அது தன்னுடைய சொந்த பணம் என்று தெரிவித்தார். அதனை அலுவலக பணக்கையிருப்பு பதிவேட்டில் சரிபார்க்கப்பட்டு மேற்படி பணம் ரூ.100/- ஐ அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அதனை தொடர்ந்து தெற்குபுறத்தில் அமைந்துள்ள பதிவறையை பார்வையிட்ட போது அவ்வறையில் மையப்பகுதியில் இருந்த இருக்கையில் பணிசெய்து கொண்டிருந்த நபரை பற்றி விசாரிக்க அவர் தனது பெயர் G.R.ராஜகோபாலன் என்றும் தான் கடந்த 2009 ஆம் ஆண்டு சார்பதிவாளர் அலுவலகத்தில் உள்ள ஆவண தொகுதிகளை பையிண்டிங் செய்வதும், EC பார்த்து கொடுத்தும் நகல் போடுவது போன்ற பணிகளை மேற்கொண்டு வருவதாகவும், தனக்கு தினக்கூலியாக ரூ.500/- சார்பதிவாளரிடம் பெற்று வருவதாக தெரிவித்தார். அவரிடம் பணம் உள்ளதா என்று விசாரிக்க அவர் மணிபர்ஸ்சில் இருந்து ரூ.860/- எடுத்து ஆஜர் செய்தார். அதனை பற்றி அவரிடம் கேட்க அவர் தனது சொந்த பணம் என்று கூறியதால், மேற்படி பணம் ரூ.860/- ஐ அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் அவரிடம் வேறு ஏதேனும் பணம் பற்றி விசாரிக்க அவர் அமர்திருந்த இருக்கைக்கு அருகில் போடப்பட்டிருந்த நீளமான மரடேபிளில் வைக்கப்பட்டிருந்த ஆவணங்களுக்கு

அடியிலிருந்து ஒரு சிறிய காக்கி நிற கவரை எடுத்து ஆஜர் செய்தார். அதனை பார்வையிட்ட போது அதன் முன்பகுதியில் EC, C.C.A என்று பென்சிலால் எழுதப்பட்டிருந்தது. மேலும் அந்த கவரை திறந்து பார்க்க அதில் 2700 என்று பென்சிலால் எழுதப்பட்டிருந்தது. அந்த கவரினுள் இருந்த பணத்தை எடுத்து எண்ணி பார்க்க அதில் ரூ.2,700/– (500x4, 200x1, 100x5) இருந்தது. அதனை பற்றி கேட்க EC போடுவதற்காக வரும் நபர்களிடமிருந்து EC மற்றும் நகல் போட்டு கொடுப்பதற்காக அவர்களிடமிருந்து பெற்ற பணம் என்று தெரிவித்தார். அதன் விவரத்தை பற்றி கேட்க இன்று C.C.A நகல் எடுக்க ஆவண எண்.400/1997, 682/1997, 2226/1976, 2227/1976, 189/1968, 146/1992 மற்றும் EC போட்ட வகையில் க.ச.எண்.165/9 கள்ளிபாளையம், கோவை ஆகியவற்றை எடுத்து கொடுத்ததாகவும், அதற்காக மேற்படி பணம் ரூ.2700/– பெற்றதாகவும் தெரிவித்தார். ஆகவே மேற்படி பணம் ரூ.2700/– மற்றும் காக்கி நிற கவர் ஆகியவைகளை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி அறையில் அமர்திருந்த மற்றொரு நபரை பற்றி விசாரிக்க அவர் தனது பெயர் M.சிபின் என்றும், சார்பதிவாளர் திரு.பீட்டர் மைக்கில் அவர்கள் மூலமாக இவ்வலுவலகத்திற்கு வந்து இரண்டு வருடங்களாக சார்பதிவாளர் திரு.பீட்டர் மைக்கில் சொல்லும் வேலைகளை செய்து வந்ததாகவும், சார்பதிவாளர் மற்றும் அலுவலக பணியாளர்களுக்கு டீ மற்றும் சாப்பாடு வாங்கி கொடுக்கும் வேலையை செய்து வந்ததாகவும், இதற்காக திரு.பீட்டர் மைக்கில் அவர்கள் தனக்கு தினக்கூலியாக ரூ.300/– கொடுத்து வந்ததாகவும், நேற்று திரு.பீட்டர் மைக்கில் அவர்கள் பணிமாறுதலில் பொள்ளாச்சி, கோவை தெற்கு சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று விட்டதாக தெரிவித்தார். அவரிடம் பணம் பற்றி விசாரிக்க அவரிடமிருந்து ரூ.1700/– ஐ எடுத்து ஆஜர் செய்து அது தனது சொந்த பணம் என்று கூறியதால் மேற்படி பணத்தை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் அவரிடம் பத்திரபதிவிற்காக ஆவண எழுத்தர்களிடமிருந்து வசூல் செய்த பணம் பற்றி விசாரிக்க அவர் அந்த பதிவறையினுள் மேற்கு பார்த்தவாறு வைக்கப்பட்டிருந்த ஸ்டீல் பிரோவில் இருந்து Legandary Native Treats என்று பெயர் பொறிக்கப்பட்ட ஒரு சிறிய ஸ்டீல் பாக்சை எடுத்து ஆஜர் செய்தார். அதை திறந்து பார்வையிட்ட போது அதில் 500 ரூபாய் நோட்டுக்கள் மற்றும் 200 ரூபாய் நோட்டுகள் தனித்தனியாக இரண்டு கத்தைகளாக லப்பர்பேண்டு சுற்றப்பட்டு இருந்தது. அதில் 500 ரூபாய் நோட்டு கத்தையை எண்ணி பார்க்க அதில் ரூ.38,000/– (500x76) இருந்தது. மேலும் 200 ரூபாய் நோட்டு கத்தையை எண்ணி பார்க்க அதில் ரூ.5200/– (200x26) இருந்தது. ஆக மொத்தம் ரூ.43,200/– இருந்தது. மேற்படி பணம் பற்றி விசாரிக்க இன்று சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.5361/2026 க்காக பொறுப்பு சார்பதிவார் / உதவியாளர் திரு.செல்வக்குமார் அவர்கள் அவருக்காக என்னை

அட்வகேட் திரு.நடேசன் அவர்களிடமிருந்து பணம் ரூ.25,000/– (500x50) வாங்கி வைக்க சொன்னதன் பேரில் அவரிடமிருந்து நான் வாங்கி வைத்தேன். அந்த பணத்தை மேற்படி ஸ்டீல் பாக்சில் வைத்ததாகவும், அப்போது அதில் எற்கனவே பணம் ரூ.5200/– (200x26) இருந்தது என்று அது பற்றி தனக்கு தெரியாது என்று கூறியவரிடம், ஸ்டீல் பாக்சில் மீதி இருந்த பணம் ரூ.13,000/– (500x26) பற்றி விசாரிக்க அந்த பணம் அந்த அறையில் அப்போது இருந்த ராஜகோபால் அவர்களை காண்பித்து அவர் வைத்த பணம் என்று கூறினார். இதனால் ராஜகோபால் அவரிடம் விசாரிக்க அவர் இன்று இவ்வலுவலகத்தில் ஆவண எண்.5347/2026 பதிவு செய்ததற்காக பொறுப்பு சார்பதிவார் / உதவியாளர் திரு.செல்வக்குமார் அவர்கள் அவருக்காக ரூ.8000/– (500x16) ஐ நுலகத்திற்கு எதிரில் அமைந்துள்ள பத்திரம் தாயர் செய்யும் உஷாராணி என்பவரிடமிருந்தும், ஆவண எண்.5394/2026, 5395/2026 பதிவு செய்ததற்காக பொறுப்பு சார்பதிவார் / உதவியாளர் திரு.செல்வக்குமார் அவர்கள் அவருக்காக ரூ.5000/– (500x10) ஐ அட்வகேட் திரு.பரிபாலா வின்சென்ட் அலுவலகத்தில் இருந்து கொண்டு வருவதை வாங்கி வைக்க சொன்னதன் பேரில் தான் அவர்களிடமிருந்து வாங்கி ஸ்டீல் பாக்சில் வைத்ததாகவும் கூறினார். ஆக மொத்தம் பணம் ரூ.43,200/– ஐ பொறுப்பு சார்பதிவார் / உதவியாளர் திரு.செல்வக்குமார் அவர்களுக்காக திரு.சிபின் மற்றம் திரு.ராஜகோபால் ஆகியோர்கள் லஞ்சமாக வாங்கிய பணம் என்று தெரியவருவதால் மேற்படி பணம் ரூ.43,200/– மற்றும் ஸ்டீல் பாக்ஸ் ஆகியவைகள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் கோவை ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு திடீர் சோதனை குழுவினரை கண்டதும் பொது மக்கள் அமர்திருந்த வராண்டாவில் நின்றுகொண்டு அங்கிருந்த ஜன்னல் வழியாக கையில் பணம் கொடுக்க முயன்ற நபரை அழைத்து அவரை பற்றி விசாரிக்க அவரது பெயர் திரு.அருண்குமார், த/பெ.அர்ஜுணன் என்றும், கதவு எண்.401, 100 அடி ரோடு கிழக்கு புறம், ஏ.ஆர்.சி.கட்டிடம், காந்திபுரம், கோவை என்ற இடத்தில் அமைந்துள்ள K.S.ஈஸ்வரமூர்த்தி என்ற ஆவண எழுத்தரிடம் கடந்த 1 வருடமாக பணிபுரிந்து வருவதாகவும் கூறினார். மேலும் அவர் கையில் வைத்திருந்த பணம் பற்றி விசாரிக்க அவர் தன்னிடமிருந்த பணம் ரூ.10,500/– ஐ எடுத்து ஆஜர் செய்து மேற்படி பணம் இன்று இவ்வலுவலகத்தில் பதிவான ஆவண எண்.5407/2026 க்கான உரிமையாளர் பாபு மனோகரன் அவர்களிடம் கொடுத்ததாகவும், அது பற்றி விசாரித்த போது அவர் முன்னுக்கு பின் முரனாக தகுந்த முகாந்திதரம் இல்லாமல் விளக்கம் அளித்ததால், மேற்படி பணம் ரூ.10,500/– (500x21) ஐ த்தை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அதே வராண்டாவில் நின்றுகொண்டிருந்த இரண்டு நபர்களை பற்றி விசாரிக்க அதில் ஒருவரது பெயர் திரு.சந்திரசேகர், த/பெ.அருணாசலம், Q3 ஆழியார் வீதி, ஸ்ரீராம் கார்டன், பேஸ்–1, வேடப்பட்டு போஸ்ட், கோவையில் வசித்து வருவதாகவும், அவர் அட்வகேட்டாக இருந்து

ஆவண தயார் செய்து கொடுத்து வருவதாகவும் கூறினார், மேலும் அவர் வைத்திருந்த பேக்கை பற்றி விசாரிக்க, அவர் தான் வைத்திருந்த பேக்கில் இருந்து பணம் ரூ.65,000/– (500x130) எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி அவர் ஆஜர் செய்த பணம் பற்றி கேட்க தானும், அவர் அருகில் இருந்த திரு.வினோத் என்பவரும் ஆவண எழுத்தராக இருந்து பத்திரங்கள் தயார் செய்து கொடுத்து வருவதாகவும் அதன்படி இன்று அட்வகேட் வினோத் அவர்கள் தயாரித்து இந்த அலுவலகத்தில் பதிவான ஆவண எண்.5402/2026 க்காக இந்த ஆவணத்தின் சொத்துகளை விற்ற திரு.அஸ்வின் துவாரகேஷ் என்பவர் எங்களுக்கு ஆவணம் தயார் செய்து கொடுத்ததற்காக பெற்ற பணம் ரூ.65,000/– என்று கூறினார். அதன்படி மேற்படி திரு.அஸ்வின் துவாரகேஷ் என்பவரை நேரில் அழைத்து விசாரித்த போது அவருக்கும் இந்த பணத்திற்கும் சம்மந்தம் இல்லை என்று கூறியதால் மேற்படி பணம் ரூ.65,000/–க்கு உண்டான தகுந்த முகாந்திரம் இல்லாததாலும், இந்த பணம் சார்பதிவாளர் அலுவலருக்கு மேற்படி ஆவணம் பதிவு செய்வதற்காக லஞ்சமாக கொடுக்கப்பட்ட பணமான இருக்க கூடும் என்று கருதி மேற்படி பணம் ரூ.65,000/– ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இவ்வாறாக காந்திபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து மொத்த பணம் ரூ.1,21,400/–ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் திடீர் தணிக்கை நடவடிக்கையின் போது அலுவலகத்தில் இருந்து 1) காந்திபுரம் சார்பதிவாளர் அலுவலகம் வருகைப் பதிவேடு (தொகுதி எண்.72) 01.01.2026 முதல் 31.12.2026 வரை - ஜீன் மாதத்திற்கானது (பக்கம் 1 முதல் 6 வரை). 2) காந்திபுரம் சார்பதிவாளர் அலுவலகம் தகவல் தொழில் நுட்ப பணியாளர்கள் வருகைப்பதிவேடு (பக்கம் 1 முதல் 4 வரை). 3) காந்திபுரம் சார்பதிவாளர் அலுவலகம் நிரந்த முன் பணப் பதிவேடு (தொகுதி எண்.3) ஆரம்பம் 01.01.2016 (பக்கம் 1 முதல் 4). 4) காந்திபுரம் சார்பதிவாளர் அலுவலகம் பணக் கையிருப்பு பதிவேடு தொடக்கம் 01.01.2026 (பக்கம் 1 முதல் 4). 5) காந்திபுரம் சார்பதிவாளர் அலுவலக கணினியிலிருந்து இன்றைய தினம் பதிவாயிருந்த ஆவணங்களின் விபரம் அடங்கிய A-Account (பக்கம் 1 முதல் 12). 6) காந்திபுரம் சார்பதிவாளர் அலுவலகதின் Year 2026 month June Sub Division Account (பக்கம் 1 & 2). 7) காந்திபுரம் சார்பதிவாளர் அலுவலகதின் Year 2026 month June IP Camera/CD Account (பக்கம் 1 முதல் 6 வரை). 8) காந்திபுரம் சார்பதிவாளர் அலுவலகதின் Birth/Death Cash Account date form 04.06.2026 to 04.06.2026 (பக்கம் 1 & 2). 9) காந்திபுரம் சார்பதிவாளர் அலுவலகதின் Year 2026 month June Section 41 Account (பக்கம் 1 முதல் 6வரை). 10) காந்திபுரம் சார்பதிவாளர் அலுவலகதின் Year 2026 month June Account H(பக்கம் 1 & 2). 11)காந்திபுரம் சார்பதிவாளர் அலுவலகதின் Year 2026 month June Account D(பக்கம் 1 முதல் 8 வரை). 12) காந்திபுரம் சார்பதிவாளர் அலுவலகதின் Year 2026 month June Hindu Marriage Account (பக்கம் 1 & 2). 13)

காந்திபுரம் சார்பதிவாளர் அலுவலகதின் 04.06.2026-ம் தேதிக்கான முன்பதிவு ஆவண அடையாள வில்லை (Appointment Token Detail) (பக்கம் 1 முதல் 12 வரை). 14) கிரைய ஆவண எண்கள் 5394/2026, நாள் 04.06.2026, கிரையஆவணஎண் 5395/2026, நாள் 04.06.2026, கிரைய ஆவணஎண் 5347/2026, நாள் 04.06.2026, கிரைய ஆவண எண் 5361/2026, நாள் 04.06.2026, 5402/2026, நாள் 04.06.2026, 5403/2026, நாள் 04.06.2026. 15) வில்லங்கச் சான்று திரு.தங்கராஜ், கள்ளிபாளையம் ஆவண எண்.3081/1953 (S.F.No.165/9). 16) சான்றிட்ட நகல் மனு ஆவண எண்.400/1997, 682/1997, 2226/1976, 2227/1976, 189/1968, 146/1992. மேற்படி ஆவணங்கள் நகல்கள் எடுக்கப்பட்டு அதில் சார்பதிவாளரிடம் (பொறுப்பு) அவர்களிடம் சான்றோப்பம் பெறப்பட்டு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் திரு.செல்வக்குமார், திரு.சிபின், திரு.ராஜகோபால் ஆகியோர்களை விசாரித்து தனிதனியாக வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டது. மேற்படி திடீர் ஆய்வின் போது தலைமை காவலர் 1300 திருமதி.சங்கீதா அவர்களும் உடனிருந்தார். திடீர் ஆய்வின் போது மொத்தம் பணம் ரூ.1,21,400/–, ஒரு ஸ்டீல் பாக்ஸ் மற்றும் ஒரு காக்கி நிற கவர் ஆகியவைகளை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இது சம்மந்தமாக திடீர் ஆய்வு நடவடிக்கைகள் தயாரிக்கப்பட்டது. திடீர் ஆய்வின் போது கைப்பற்றப்பட்ட மொத்தம் பணம் ரூ.1,21,400/–, ஒரு ஸ்டீல் பாக்ஸ், ஒரு காக்கி நிற கவர், வாக்குமூலங்கள், திடீர் ஆய்வு நடவடிக்கை மற்றும் இதர ஆவணங்களின் நகல்கள் ஆகியவற்றை இத்துடன் இணைத்துள்ளேன். எனவே திடீர் தணிக்கையில் கண்டுபிடிக்கப்பட்ட முறைகேடுகள் சம்மந்தமாக 1) திரு.G.செல்வக்குமார், த/பெ.குருசாமி, உதவியாளர் / சார்பதிவாளர் (பொறுப்பு), காந்திபுரம் சார்பதிவாளர் அலுவலகம், சரவணம்பட்டி, கோவை 2) திரு.M.சிபின், த/பெ.மணி, கதவு எண்.73பி, சி.எம்.எஸ் பள்ளி அருகில், கே.ஆர்.ஜி நகர், கணபதி, கோவை 3) திரு.G.R.ராஜகோபால், த/பெ.ராமசாமி, கதவு எண்.44, பிள்ளையார் கோவில் வீதி, கோபிசெட்டிபாளையம், 4) திரு.A.சந்திரசேகர், த/பெ.அருணாசலம், அட்வகேட், Q3 ஆழியார் வீதி, ஸ்ரீராம் கார்டன், பேஸ்–1, வேடப்பட்டு போஸ்ட், கோவை மற்றும் 5) திரு.A.அருண்குமார், த/பெ.அர்ஜுணன், கதவு எண்.4/182, தெற்கு வீதி, கங்காரகோட்டை, எழுமிச்சம்காயம்பட்டி, துங்கரெட்டியாபட்டி போஸ்ட், சாத்தூர், விருதுநகர் மாவட்டம்–626203 ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (Sdxxxxx) 5/6/2026 (T.சங்கீதா) துணை ஆய்வுகுழு அலுவலர் / வட்டாட்சியர், மாவட்ட ஆய்வுகுழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கோயம்புத்தூர். இணைப்பு– 1) திடீர் ஆய்வு நடவடிக்கை,_2) கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,21,400/–,_3) பதிவு செய்யப்பட்ட மூன்று வாக்குமூலங்கள்,_4) கைப்பற்றப்பட்ட ஆவணங்களின் நகல்கள்,_5) கைப்பற்றப்பட்ட ஒரு ஸ்டீல் பாக்ஸ் மற்றும் ஒரு காக்கி நிற

கவர். Sir, Received the complaint along with Proceeding, Statements, Photo Copy of documents, One Brown Colour Cover, One Steel Box and Cash of Rs.1,21,400/- on 05.06.2026 at 15.30 hrs and registered a case in Coimbatore V&AC Cr.No.6/2026/AC/CB u/s 7(a), 12 r/w 7(a), 8 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 on 05.06.2026 at 16.00 hrs. (Sdxxxxx) 5/6/2026 (G.ARUMUGAM), Inspector of Police, Vigilance and Anti Corruption, Coimbatore. இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, புகார் மனு, திடீர் ஆய்வு நடவடிக்கைகள், வாக்குமூலங்கள், ஒரு காக்கி நிற கவர், ஒரு ஸ்டீல் பாக்ஸ், கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,21,400/- ஆகியவற்றை கனம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, கோயம்புத்தூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும் முதல் தகவல் அறிக்கையின் நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

5/6/2026

(G.ஆறுமுகம்)
காவல் ஆய்வாளர்,
ஊ.த.க பிரிவு, கோவை.